# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1887/11 - 2014 නොවැම්බර් මස 03 වැනි සඳුදා - 2014.11.03

*1887/11 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், திருக்கோவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதி பெறாது சபையின் தொடர் கூட்டங்கள் மூன்றுக்கு சமுகமளிக்காமை காரணமாக திருக்கோவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேகராசா சந்திரகுமார் என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் திருக்கோவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. கந்தையா அமிர்தலிங்கம் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது திருக்கோவில் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தொன் திலிண இஷான் விக்ரமரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. கந்தையா அமிர்தலிங்கம் என்பவர் திருக்கோவில் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

திலிண விக்ரமரத்ன,<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
திருக்கோவில் பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,<br>
அம்பாறை,<br>
*2014, ஒற்றோபர் 31.*

*11- 500*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.